**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL..**

**C.C.No. 378/2021**

**Prosecution Witness : 6**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : லிடியா செல்வி | **Caste** | : |
| **Father's Name** | : ஆசீர்வாதம் | **Calling** | : சார்பு ஆய்வாளர்(மாவட்ட குற்றப்பிரிவு) |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : கடலூர் | **Age** | : 34/2026 |
| | | **Dated** | : 12.05.2026 |

**12.05.2026**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 8 **திருமதி. லிடியா செல்வி**ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா.** 6 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**1 ,2 எதிரிகள் ஆஜர் இல்லை . U/s.355 of petition filed and allowed.**

**முதல் விசாரணை**

நான் தற்போது கடலூர் மாவட்ட குற்றப்பிரிவில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்துவருகிறேன். கடந்த 02.08.2020 ம் தேதி திண்டுக்கல் தாடிக்கொம்பு காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில்இருந்தபோது திண்டுக்கல் தலைமை அரசு மருத்துவமனையில் இருந்து வரப்பெற்ற தகவலைப்பெற்று மருத்துவனை சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த திண்டுக்கல் மேற்கு மீனாட்சிநாயக்கன்பட்டி பெரியசாமி மகன் சங்கர் என்பவரை விசாரணை செய்து புகார் வாக்குமூலம் பெற்று 11.00 மணிக்கு நிலையம் வந்து நிலைய குற்ற எண்.883/2020 சட்டப்பிரிவுகள் 294(B), 324, 506(I)இதச வாக முதல்

தகவல் அறிக்கை பதிவுசெய்தேன். வழக்கினை எனது புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 03.08.2020ம் தேதி மதியம் 12.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் பார்த்திபன் , கிருஷ்ணன் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று வாக்குமூலம் பதிவுசெய்தேன். பின்பு சாட்சிகள் சங்கர், சந்தோஷ், பாலசுப்பிரமணியம், ஜோதி ஆகியோரை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவுசெய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 , வரைபடம் அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பணிமாறுதல் காரணமாக சென்றுவிட்டதால் வழக்குக்கோப்பை சார்பு ஆய்வாளர் அனிதா வசம் ஒப்படைத்தேன். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

முதல் தகவல் அறிக்கையில் மருத்துவமனையில் பெற்ற Intimation Number இல்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை காலம் 14ல் அ.சா.1 யிடம் கையொப்பம் பெறப்படவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் சம்பவ இடம் அ.சா.1ன் வீட்டில் நடந்ததாக மாதிரி வரைபடத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.1 சங்கர் , அ.சா.2 ஜோதி கணவர் மனைவி என்றால் சரிதான். அ.சா.1 சங்கர் , அ.சா.2 ஜோதித் தவிர இவ்வழக்கில் வேறு சாட்சிகளை கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்த நேரம், சம்பவ இடத்தில் இரத்தம் பட்டமண் மற்றும் இரத்தம் படாத மண் அத்தாட்சியில் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.1யை விசாரித்தபோது சம்பவ தேதியில் சம்பவ நேரத்தில் அவர் அணிந்திருந்த இரத்தம் பட்ட உடைகளை இவ்வழக்கில் கைப்பற்றி சான்றுப்பொருளாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். எதிரிகளிடம் இருந்து சான்றுபொருட்கள் ஏதும் இவ்வழக்கில் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். . முதல் தகவல் அறிக்கையில் சம்பவ நேரம் குறித்து குறிப்பிட்டுச்சொல்லப்படவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் அ.சா.1 சாட்சியாக சந்தோஷ் என்பவர் மூலம் ராஜேந்திரன் என்பவர் மூலம் எவ்வளவு பணம் வாங்கிக்கொடுத்திருந்தார் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். புகாரில் சொல்லியுள்ளது போல் சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை 22 நாட்கள் காலதாமதமாக நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டதற்கான காரணம் ஏதும் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது போல் சம்பவம் ஏதும் நடைபெறவில்லை மற்றும் சம்பவ இடம் சென்று சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றாலும் மாதிரி வரைபடம், பார்வை மகஜா் தயார் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

அ.சா.1 கொடுத்த பொய்யான புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

**இல்லை**

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.05.12 12:09:17 +0530

Judicial Magistrate No.II

Dindigul.